**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>**
**<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>**
**<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>**

எ.ம.சா.1 தேதி.02.04.2025

| MCOP. No. | 1/2022 | | |
|---|---|---|---|
| பெயர் | அலமேலுமங்கை | க/பெ, | முகேஷ்கண்ணா |
| வயது | 35 | தொழில் | தட்டச்சர், வட்டார போக்குவரத்து அலுவலகம், மயிலாடுதுறை. |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | மயிலாடுதுறை | தாலுக்கா | மயிலாடுதுறை |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி சம்மனின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். சம்மனின் கோரியுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். வழக்கு சம்பந்தமாக நான் சாட்சியம் அளிக்க எனது மேலதிகாரி எனக்கு வழங்கியுள்ள அனுமதிக்கடிதம் **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. குத்தாலம் காவல் நிலைய குற்ற எண் 96/2021ன் வழக்கின் தொடர்புடைய TN 05 BB 3411 என்ற வாகனத்தை ஓட்டிச்சென்ற ஓட்டுநர் சுமன் என்பவருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை. அதற்காக அவருக்கு குற்ற அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **எ.ம.சா.ஆ.2** ஆகும்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

05.02.2021 ஆம் தேதி குத்தாலம் காவல் நிலையத்திலிருந்து வாகனத்தை சோதனை செய்ய கடிதம் கொடுத்து அனுப்பியிருந்தார், அவர்கள் கொடுத்த கடிதத்தில் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமத்தை ரத்து செய்ய கோரியுள்ளார்கள். அதனால் தான் ஓட்டுநர் உரிமத்தை எங்களிடம் காட்டவில்லை என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.